


# அன்று வேறு கிழமை

னக்கூத்தன்

T
891.481 418
G 531 A

891.481
418
G531 A

INDIAN INSTITUTE OF
ADVANCED STUDY
LIBRARY SIMLA

# அன்று
# வேறு
# கிழமை

ஞானக் கூத்தன்

வெளியீடு

அன்னம் (பி)லிட்., சிவகங்கை

T
891.481 418
G531A

90235
2-9-99
Library IIAS, Shimla
T 891.481 418 G 531 A
00090235

○ அன்று வேறு கிழமை □
ஞானக்கூத்தன் கவிதைகள் □
முதற்பதிப்பு 1973 இரண்டாம் பதிப்பு 1980
மூன்றாம் பதிப்பு அக்டோபர் 1991 □ அச்சாக்கம்:
அகரம் சிவகங்கை □ ஓவியங்கள் ஆதிமூலம் சிதம்பர
கிருஷ்ணன் தட்சிணாமூர்த்தி □ அட்டைஓவியம் ஆதிமூலம்
வெளியீடு அன்னம்(பி)லிட்.சிவகங்கை□விலை ரூபாய்14—00

# முன்னுரை

மனதில் கவிதை தோன்றிவிடுமானால் கவிஞனுக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டு விடுகிறது.

அப்படித் தோன்றுகிற ஒவ்வொரு கவிதையையும் கவிஞன் எழுதி விடுவதுமில்லை, எழுத முடிவது மில்லை.

உதயமான கவிதையை எழுத முடிந்து அது மனதில் தோன்றிய கவிதையைப்போலவே இருந்துவிடுமானால் அந்தத் தருணத்தைப் போலக் கவிஞனுக்கு மகிழ்ச்சி தருவது வேறில்லை.

எழுதப்பட்ட கவிதைகளைத் தொகுத்து நூலாக வெளியிடுவது மிகவும் கடினமாக இருக்கிறது. ஒரு தொகுப்பு வெளியிட முடிந்து விட்டால் அது பெரிய சாதனையாகத் தெரிகிறது. முதல் தொகுப்பில் ஏற்பட்ட அனுபவம் அடுத்தது வேண்டாம் என்கிற எண்ணத்தைத் தந்து விடுகிறது. இருந்தாலும் கவிஞர்கள் தொகுப்புகளை வெளியிடத்தான் செய்கிறார்கள். 'வெளியீட்டு ஊதியம்' என ஒன்றில்லா விட்டாலும் கூடக் கவிஞர்கள் வெளியிடுகிறார்கள். கலைவாணிக்குக் கடமைப்பட்ட இக்கடன்களை அவள் பெற்றுக் கொண்டு சும்மா இருந்து விடுகிறாள்.

சிந்திக்கிற அளவுக்கு நான் எழுதுவதில்லை. எழுதுகிற அளவுக்கு வெளியிடுவதில்லை. அப்படியும் மூன்று தொகுப்புகள் இதுவரை வெளிவர முடிந்தது. இன்னும் ஒன்றும் வரலாம்.

இத்தொகுப்பு மூன்றாம் பதிப்பாக வருவது எனக்கு மகிழ்ச்சி. தொடக்கத்திலிருந்தே என் கவிதைகளுக்கு மிகச்சிறந்த வாசகர்களை நான் பெற்று வந்திருக்கிறேன். இத்தொகுப்பு மேலும் பல புதிய வாசகர்களைச் சந்திக்கப் போகிறது என்பதில் எனக்கு மேலும் மகிழ்ச்சி.

இக்கவிதைகள் வெளியாகிய நடை, கசடதபற, தீபம் ஞானரதம், கணையாழி ஆகிய ஏடுகளை நான் நன்றியுடன் நினைவு கூருகிறேன்.

அன்னம் வெளியீட்டுக்கு நன்றி

சென்னை.5
19.8.91,

ஞானக்கூத்தன்

# தவளைகள்

தவளையின் கூச்சல் கேட்டுத்
தமிழ்க்கூச்சல் என்றான் கம்பன்
ஆயிரம் வருஷம் போச்சு
போயிற்றா தவளைக் கூச்சல்

மாதத்தில் ஒன்றைக்
கண்ணன்
மட்டுமா பிடிக்கும் என்றான்
தவளைக்கும் பிடித்த மாதம்
ஒன்றுண்டு பன்னிரண்டில்

குளத்திலே இலைத்தண்ணீரில்
குதூகலத் தவளைக் கூட்டம்
குதித்திடும் கூச்சல் போடும்
படித்துறை ஏறித் தாவும்

நீர்மட்டத் தளவு தோன்றித்
தாமதித்து நீரில் மீளும்
தவளையின் வயிற்றைப் பார்த்தால்
சந்தனக் கட்டி தோற்கும்

கண் மறைவாக எங்கோ
கதிரவன் தேர்க்கால் சிக்கி
உருள்கிற சப்தம் கேட்டுத்
தவளைகள் போலி செய்யும்

தவளைகள் இரவில் தங்கள்
சுகங்களை உரத்துப் பேச
அனைத்தையும் ஒட்டுக் கேட்டேன்
அப்புறம் உனக்கும் சொல்றேன்

கம்பனைக் கார்காலத்தைச்
சொல்லென்றேன் அவனும் சொன்னான்
ஏனெனில் தவளைப் பேச்சு
அடிபடும் கொஞ்சம் அங்கே

கொல்லையில் க்ராக் க்ராக் க்ராக் க்ராக்
''சாக்கடை மூடியாச்சா?''
படுக்கையில் அப்பா கேட்டார்

தூங்கிடும் சமயம்
சோம்பல்
எழுந்து போய் ஒன்று செய்ய

சிறுவர்கள் சொன்னோம். ''ஆச்சு''
ஆதரித்து அம்மா
தானும்
ஆயிற்று என்றபோது
முற்றத்தின் நடுவில் க்ராக் க்ராக்

தவளைகள்—
நன்றாய்ப் பார்த்தால்
தாவர ஜீவ்யக் காய்கள்
தவளைகள் பிடிக்கும்
இந்தத்
தவளைகள் ருசி அலாதி

O

சாப்பாட்டுச் சமயத்தில் மனைவியோடு
சச்சரவு பேய்க்கூட்டம் பிள்ளைக் கூட்டம்
கடன்தொல்லை ஒருபிடுங்கி உத்தியோகம்
எல்லாமும் வெறுப்பேற்ற பிய்த்துக்கொண்டு
படிக்கட்டில் வந்தமர்ந்தான் சுப்பராமன்

''வீட்டுவரி கட்டலியா? இல்லையென்றால்
படிக்கட்டை அவன் பெயர்த்துப் போட்டுப் போவான்
இருவர்க்கும் அவமானம்''
யாரோ சொல்லத்
தான் திரும்பிப் பார்க்கச்சே தவளைக்குட்டி


கொல்லையிலே என்ன சப்தம் என்றாள் அம்மா
போய்ப்பார்த்து வரச்சொன்னாள். இரவு நேரம்
சரியென்று நான் போனேன் லாந்தர் ஏந்தி
கொல்லையிலே ஒன்றுமில்லை சூனியம்தான்

திரும்பிவிடக் காலெடுத்து வைத்தபோது
தோள்மீது ஒரு குதிப்பு தள்ளப்பட்டேன்
கிசுகிசுத்துப் பலபேர்கள் சூழ்ந்து கொண்டார்
என்றெண்ணி நான்பார்த்தேன் தவளைக் கூட்டம்

ஒவ்வொன்றும் ஆளுயரம் முன்கால் தூக்கிப்
பின்காலில் நின்றிருக்கும் வயிறு மூட்டை
ஒவ்வொன்றும் விரகத்தால் என்னைத் தீண்டி
முத்தமிடக் கூச்சலிட்டு ஓடப்பார்த்தேன்


ஒருதவளை பாடிற்று. ஒன்றென் தோளைத்
தட்டிற்று. மற்றொன்று ஆடை நீக்கி
அதிசயமாய்த் தேடிற்று. கூச்சலிட்டேன்
அம்மாவின் காதுகளில் விழவே இல்லை

O நவம்பர் 72



காலம் கடந்துண்ணும் எதிர்மனைப் பார்ப்பான்
எச்சிற் கலையைத் தெருவில் எறிந்தான்
ஆள் நடவாத தெருவில் இரண்டு
நாய்கள் அதற்குத் தாக்கிக் கொண்டன
ஊர் துயில் குலைத்து நாய்கள் குரைக்கவும்
அயல்தெரு நாய்களும் ஆங்காங்கு குரைத்தன
நகர நாய்கள் குரைப்பது கருதிச்
சிற்றூர் நாய்களும் சேர்ந்து குரைத்தன
நஞ்சை புஞ்சை வயல்களைத் தாவிக்
கேட்கும் குரைச்சலின் குறைச்சலைக் கேட்டு
வேற்றூர் நாய்களும் குரைக்கத் தொடங்கின
சங்கிலித் தொடராய்க் குரைத்திடும் நாய்களில்
கடைசி நாயை மறித்துக்
காரணம் கேட்டால் என்னத்தைக் கூறும்?

O அக்டோபர் 69



## யெதிரெதிர் உலகங்கள்

கண்ணிமையாக் கால்தோயாத் தேவர் நாட்டில்
திரிசங்கைப் போகவிட மாட்டேன் என்று
ஒருமுட்டாள் சொன்னதுபே ராபத்தாச்சு

தன்னாளைத் திருப்பியதும் விஸ்வாமித்ரன்
கொதித்தெழுந்தான். பிரம்மாவுக் கெதிர்ப்படைப்புத்
தான் செய்வே னென்று சொல்லி ஆரம்பித்தான்

கண்ணிமையாக் கால்தோயாத் தேவரெல்லாம்
ஓடிவந்தார் கடவுளுடன். வேண்டாமென்று
முனிவர்களில் மாமணியைக் கெஞ்சிக் கேட்டார்

சினம்தணிந்தான் தவஞானி. ஆனால் அந்தக்
கணம்மட்டும் படைத்தவைகள் உலகில் என்றும்
இருந்துவர வேண்டுமென்றான். வரமும் பெற்றான்

அன்றுமுதல் பிரம்மாவும் விஸ்வாமித்ர
மாமுனியும் படைத்தவைகள் அடுத்தடுத்து
வாழ்ந்துவரல் வழக்காச்சு. எடுத்துக்காட்டு;

மயிலுக்கு வான்கோழி புலிக்குப் பூனை
குதிரைக்குக் கழுதை குயிலுக்குக் காக்கை
கவிஞர்களுக் கெந்நாளும் பண்டிட்ஜீக்கள்

O நவம்பர் 71

# யோசனை

உனக்கென்ன தோன்றுது?

கருத்துக்கு மாறாகப் போலிசார்கள்
கட்டிவைத்துக் கையெழுத்து வாங்கலாமா?

எனக்கென்ன தோன்றுது?

வருத்தத்துக் காளானான் புலவன் என்றால்
யாப்பிலொரு கவிபாடச் சொன்னால்
போச்சு

0 அக்டோபர் 69

விழுவதால் சேதமில்லை
குலுக்கினால் குற்றமில்லை
மூலைகள் முட்களல்ல
உருவமோர் எளிமையாகும்

வாழ்க்கையில் மனிதன் கண்டு
பிடித்ததில் சிறந்ததாகும்
தலையணை. அதற்குள் ஒன்றும்
பொறி இயற் சிக்கல் இல்லை

பாயில்லை என்றால் வேண்டாம்
தலையணை ஒன்றைப் போதும்

O 71

# கொள்ளிடத்து முதலைகள்

ஒன்றிரண்டு நான்கைந்து . . .
பத்துப் பத்தாய் . . .
ஒரு நூறா? ஆயிரமா?
கணக்கில் வாரா . . .

கொள்ளிடத்தின் மணல்வெளியில்
நடுச்சாமத்தில்
கரைமரங்கள் தூக்கத்தில்
ஆடும் போதில்
ஒன்றிரண்டு நான்கைந்து
பத்துப் பத்தாய்
ஒரு நூறா? ஆயிரமா?
கணக்கில் வாரா . . .

சிறிது பெரிதாய் முதலைக் கூட்டம்

சற்றும்
அமைதி குலையாமல் அவை
பேசிக் கொள்ளும்

சிலநொடிக்குள் முடிவெடுத்துக்
கலையும் முன்னே
குறுங்காலால் மணலிலவை
எழுதிப் போட்ட
மருமமொழித் தீர்மானம்
என்ன கூறும்?

O ஏப்ரல் 70

## ஒட்டகம்

ஆயிரம் முறைகள் எண்ணிப்
பார்த்தபின் முடிவு கண்டேன்
ஒட்டகம் குரூபி இல்லை

குரூபிதான் என்றால் மோவாய்
மடிப்புகள் மூன்று கொண்ட
அத்தையும் குரூபி தானே?

அத்தையைக் குரூபி என்றோ
ஒருவரும் சொல்வதில்லை
சண்டைகள் வந்தாலன்றி

சண்டைகள் வந்தபோது
மற்றவர் அழகில் குற்றம்
பார்ப்பது உலக நீதி

ஒட்டகம் குரூபி என்றால்
அதனுடன் உலகுக் கேதும்
நிரந்தரச் சண்டை உண்டோ?

O 72

## கீழ்வெண்மணி

மல்லாந்த மண்ணின் கர்ப்ப
வயிறெனத் தெரிந்த கீற்றுக்
குடிசைகள் சாம்பற் காடாய்ப்
போயின

புகையோடு விடிந்த போதில்
ஊர்க்காரர் திரண்டு வந்தார்

குருவிகள் இவைகள் என்றார்
குழந்தைகள் இவைகள் என்றார்
பெண்களோ இவைகள்? காலி
கன்றுகள் இவைகள் என்றார்

இரவிலே பொசுக்கப்பட்ட
அனைத்துக்கும் அஸ்தி கண்டார்
நாகரிகம் ஒன்று நீங்க

O அக்டோபர் 69

## தோழர் மோசிகீரனார்

மோசிகீரா
மகிழ்ச்சியினால்
மரியாதையை நான்
குறைத்ததற்கு
மன்னித்தருள வேண்டும் நீ

சொந்தமாக உனக்கிருக்கும்
சங்கக்கவிதை யாதொன்றும்
படித்ததில்லை நான் இன்னும்

ஆனால் உன்மேல் அளவிறந்த
அன்பு தோன்றிற்று
இன்றெனக்கு

அரசாங்கத்துக் கட்டிடத்தில்
தூக்கம் போட்ட முதல்மனிதன்
நீதான் என்னும் காரணத்தால்

O ஏப்ரல் 70

## ஸ்ரீலஸ்ரீ

யாரோ முனிவன் தவமிருந்தான்
வரங்கள் பெற்றான் அதன் முடிவில்
நீர்மேல் நடக்க தீபட்டால்
எரியாதிருக்க என்றிரண்டு

ஆற்றின் மேலே அவன் நடந்தான்
கொடுக்குத் தீயைச் சந்தனம் போல்
உடம்பில் பூசிச் சோதித்தான்
மக்கள் அறிந்தார் கும்பிட்டார்

மறுநாள் காலை நீராட
முனிவன் போனான் ஆற்றுக்கு
நீருக்குள்ளே கால்வைக்க
முடியாதவனாய்த் திடுக்கிட்டான்

கண்ணால் கண்டால் பேராறு
காலைப் போட்டால் நடைபாதை
சிரித்துக் கொண்டு கண்ணெதிரே
ஆறு போச்சு தந்திரமாய்

காலைக் குளியல் போயிற்றா
கிரியை எல்லாம் போயிற்று
வேர்த்துப் போனான். அத்துளிகள்
உடம்பைப் பொத்து வரக்கண்டான்

யாரோ பிணத்தைக் கண்டெடுத்தார்
செத்துப் போக ஒரு நாளில்
தீயிலிட்டார். அது சற்றும்
வேகாதிருக்கக் கைவிட்டார்

நீரின் மேலே நடப்பதற்கும்
தீயாலழியா திருப்பதற்கும்
வரங்கள் பெற்ற மாமுனிவன்
மக்கிப் போக நாளாச்சு

**O ஏப்ரல் 71**

# அம்மாவின் பொய்கள்

பெண்ணுடன் சினேகம் கொண்டால்
காதறுந்து போகும் என்றாய்

தவறுகள் செய்தால் சாமி
கண்களைக் குத்தும் என்றாய்

தின்பதற் கேதும் கேட்டால்
வயிற்றுக்குக் கெடுதல் என்றாய்

ஒருமுறத் தவிட்டுக்காக
வாங்கினேன் உன்னை என்றாய்

அத்தனைப் பொய்கள் முன்பு
என்னிடம் சொன்னாய் அம்மா

அத்தனைப் பொய்கள் முன்பு
சொன்ன நீ எதனாலின்று
பொய்களை நிறுத்திக் கொண்டாய்

தவறு மேல் தவறு செய்யும்
ஆற்றல் போய் விட்டதென்றா?
எனக்கினி பொய்கள் தேவை
இல்லையென் றெண்ணினாயா?

அல்லது வயதானோர்க்குத்
தகுந்ததாய்ப் பொய்கள் சொல்லும்
பொறுப்பினி அரசாங்கத்தைச்
சார்ந்ததாய்க் கருதினாயா?

தாய்ப்பாலை நிறுத்தல் போலத்
தாய்ப் பொய்யை நிறுத்தலாமா?

உன்பிள்ளை உன்னை விட்டால்
வேறெங்கு பெறுவான் பொய்கள்?

O ஜூலை 71



## சைக்கிள் கமலம்

அப்பா மாதிரி ஒருத்தன் உதவினான்
மைதானத்தில் சுற்றிச் சுற்றி
எங்கள் ஊர்க் கமலம் சைக்கிள் பழகினாள்

தம்பியைக் கொண்டு போய்ப்
பள்ளியில் சேர்ப்பாள்
திரும்பும் பொழுது கடைக்குப் போவாள்
கடுகுக்காக ஒரு தரம்
மிளகுக்காக மறு தரம்
கூடுதல் விலைக்குச் சண்டை பிடிக்க
மீண்டும் ஒரு தரம் காற்றாய்ப் பறப்பாள்

வழியில் மாடுகள் எதிர்ப்பட்டாலும்
வழியில் குழந்தைகள் எதிர்ப்பட்டாலும்
இறங்கிக் கொள்வாள் உடனடியாக

குழந்தையும் மாடும் எதிர்ப்படா வழிகள்
எனக்குத் தெரிந்து ஊரிலே இல்லை

எங்கள் ஊர்க்கமலம் சைக்கிள் விடுகிறாள்
என் மேல் ஒரு முறை விட்டாள்
மற்றப் படிக்குத் தெருவில் விட்டாள்

ஆகஸ்டு 71

கதை கேட்கப் போய் விடுவாள் அம்மா. மாடிக்
கொட்டகைக்குப் போய் விடுவார் அப்பா. சன்னத்
தாலாட்டின் முதல்வரிக்கே குழந்தைத் தம்பி
தூங்கி விடும். சிறு பொழுது தாத்தாவுக்கு
விசிறியதும் அவரோடு வீடு தூங்கும்

பூக்களெல்லாம் மலர்ந் தோய்ந்த இரவில் மெல்ல
கட்டவிழும் கொல்லையிலே பவழ மல்லி

கதை முடிந்து தாய் திரும்பும் வேளை மட்டும்
தெருப்படியில் முழு நிலவில் அந்த நேரத்
தனிமையிலே என் நினைப்புத் தோன்றுமோடீ?

# உயர்திரு பாரதியார்

ஆறு வயதில் நான் பார்த்த நடனம் ஒன்றில்
பாடினார் இளம்பெண்கள் இருவரேதோ
பாட்டுக்கு. எவரெழுதித் தந்தா ரத்தப்
பாட்டென்று நான்கேட்டேன் உம்மைச் சொன்னார்

சிறுவயதில் நான் சென்ற பொதுக் கூட்டத்தில்
சூடுள்ள சிலவரிகள் ஒருவன் சொன்னான்
எவரெழுதித் தந்தவரி என்றேன். வேர்த்த
முகம்துடைத்துக் கொண்டபடி உம்மைச் சொன்னான்

மணியறியாப் பள்ளிகளில் தண்டவாளத்
துண்டொன்று மணியாகத் தொங்கல் போலக்
கவிஞரிலாத் தமிழகத்தில் எவரெல்லாமோ
கவிஞரெனத் தெரிந்தார்கள் உமக்கு முன்பு

அணைக்காத ஒலிபெருக்கி மூலம் கேட்கும்
கலைகின்ற கூட்டத்தின் சப்தம் போலப்
பிறகவிஞர் குரல் மயங்கிக் கேட்குமின்றும்
நீர் மறைந்தீர் உம் பேச்சை முடித்துக் கொண்டு

71

# இரட்டை நிஜங்கள்

குலத்துக்குத் தெய்வம் வேறாய்க்
கொள்கிற தமிழர் தங்கள்
வழி காட்டித் தலைவரென்று
பற்பல பேரைச் சொன்னார்

என்றாலும் மனசுக்குள்ளே
இன்னொருவர் இருப்பாரென்று
ஆராய்ந்தேன் அவர்கள் போற்றும்
தலைவர்கள் யார் யாரென்று

இருந்தவர் இரண்டு பேர்கள்

அவர்களின் அடையாளங்கள்

நடப்பவர் பார்க்க மாட்டார்
பார்ப்பவர் நடக்க மாட்டார்

## பரிசில் வாழ்க்கை

வாரத்தில் ஒன்றிரண்டு வெளியூர்க் கூட்டம்
வரப்பார்க்கும் மணியார்டர் மாலை துண்டு
காரத்தில் பேசத்துப் பாக்கிச் சூடு
கல் பிறந்த காலத்தில் பிறந்தோர் தம்மை
நேரத்தில் களிப்பூட்ட அகநானூறு
நெய்யாற்றில் பாலாற்றில் பேசிப் பார்த்த
திரத்தில் தெரிந்தெடுத்த நகைத்துணுக்கு
தமிழர்க்கு வேறென்ன கொடுக்க வேண்டும்

புகையூதி ரயில் வண்டி எழும்பூர் நீங்கும்
பேச்சாளர் மனதில் கையொலிகள்கேட்கும்

பேச்சாளர் வாய் திறக்க வாய் திறந்து
பழங்குடிகள் கேட்டார் தம் எளிய மூக்கின்
மூச்சுக்கு வயதுமூவா யிரமாம் என்று
முதல் முதலாய்க் கேட்டதனால் திணறிப் போனார்
வாய்ச்சிருக்கும் இந்நாளின் வாழ்வை நொந்தார்
வளம் திரும்ப வேண்டுமெனில் இவருக்கான
பேய்ச் சுரைக்காய் சின்னத்தை மறவோம் என்றார்
பெரியதொரு மாலையிட்டு வணக்கம் போட்டார்

புகையூதி ரயில் வண்டி எழும்பூர் நீங்கும்
பேச்சாளர் மனம் புதிய பேச்சைத் தீட்டும்

ஆத்தூரில் மறு கூட்டம். தலைமை யேற்ற
அதிகப்படி தமிழர் ஒரு சுருதி சேர்த்தார்
காத்தோட்டம் இல்லாத கூட்டத்துக்குப்
பேச்சாளர் சூடேற்றிப் பேசும் போதில்
ஆத்தாடி என்றொருவன் கூச்சலிட்டான்
அடிதடிகள் பரிமாறிக் கொண்ட பின்பு
நீத்தாலும் உயிர் தொடர்வேன் என்றார். நண்பர்
விடிவதற்குள் நாளிதழில் தலைவரானார்

கும்மியடி தமிழ் நாடு முழுவதும்
குளிர்ந்திடக் கைகொட்டிக் கும்மியடி...
காணிக்கை கொண்டு வாருங்கடி கு
லோத்துங்க சோழனைப் பாருங்கடி
நாளை அமைச்சனைப் பாருங்கடி— மவு
ராசனைப் பார்த்துக் கும்மியடி...
சென்மம் எடுத்து திருதடி— இந்த
சித்திரச் சாமிக்குக் கும்மியடி

O ஜனவரி 69

# விட்டுப்போன நரி

குதிரையாகாமல்
விட்டுப்
போனதில் ஒருவன் சாமீ
குதிரையாகாமல்
விட்டுப்
போனதில் ஒருவன் சாமீ

மேற்படிக்
குரலைக் கேட்டார்
மாதொரு
பாகர். குற்றம்
எற்பட
வியந்தார். தேவி
ஏளனம்
செய்தாள் சற்று

''வாதவூரடிகட்காக
நரிகளைத் தேர்ந்த போது
நீதியோ என்னை மட்டும்
விலக்கிய செய்கை சாமீ!''

திருவருட்
திட்டம் பொய்த்த
தற்கொரு
ஊளைச் சான்றாம்
நரி எதிர்
உதித்துக் கீற்று
நிலாத் திகழ்
ஈசர் சொன்னார்:

நரிகளைப் பரிகளாக்கும்
திருவிளையாடல் முற்றும்
விடுபட்ட பேரை நாங்கள்
கவனிக்க மாட்டோம் போய்வா

O நவம்பர் 69

## தொழுநோயாளிகள்

ஐயா உம் விரல்கள் மூன்று
கிடந்தன. பெற்றுக் கொள்ளும்
அம்மணி உனதும் கூட

கால்களின் செதில்கள் அங்கே
கிடப்பதைக் கண்டேன். உங்கள்
உடம்பினை ஏனிவ்வாறு
உதிர்க்கிறீர் தெருவிலெங்கும்?

கங்கையில் விருப்பைக் கொஞ்சம்
கைவிடச் சொன்ன நூல்கள்
கேணியில் உடம்பைக் கொஞ்சம்
கைவிடச் சொன்னதுண்டா?

வெள்ளிக்கு முதல் நாள் ஊரை
வலம்வரும் தங்கட்கின்னும்
உடைமையில் கவனம் வேண்டும்

அம்மணி தங்கள் மேனி
சிந்தினால்
யாருக்காகும்?

## விடுமுறை தரும் பூதம்

ஞாயிறு தோறும் தலைமறை வாகும்
வேலை என்னும் ஒரு பூதம்
திங்கள் விடிந்தால் காதைத் திருகி
இழுத்துக் கொண்டு போகிறது

ஒருநாள் நீங்கள் போகலை என்றால்
ஆளை அனுப்பிக் கொல்கிறது
மறுநாள் போனால் தீக்கனலாகக்
கண்ணை உருட்டிப் பார்க்கிறது

வயிற்றுப் போக்கு தலைவலி காய்ச்சல்
வீட்டில் ஒருவர் நலமில்லை
என்னும் பற்பல காரணம் சொன்னால்
ஏற்றுக் கொள்ள மறுக்கிறது

வாரம் முழுதும் பூதத்துடனே
பழகிப் போன சிலபேர்கள்
தாமும் குட்டிப் பூதங்களாகிப்
பயங்கள் காட்டி மகிழ்கின்றார்

தட்டுப் பொறியின் மந்திரகீதம்
கேட்டுக் கேட்டு வெறியேறி
மனிதர் பேச்சை ஒருபொருட் டாக
மதியாதிந்தப் பெரும்பூதம்

உறைந்து போன இரத்தம் போன்ற
அரக்கை ஒட்டி உறை அனுப்பும்
'வயிற்றில் உன்னை அடிப்பேனெ'ன்று
இந்தப் பேச்சை அதுகேட்டால்

O பிப்ரவரி 72

நாள்

கொட்டிக் கொண்டு போயேன்'டா
தட்டு கொண்டு வாயேன்'மா
தொட்டுக் கொள்ளப் போடேன்'மா
கட்டை விரலைத் தொட்டுக்கொள்
பள்ளிக் கூடம் போறேன்'மா
பாதை பார்த்துப் போய் வாடா
கையில் கட்டித் தருவாயா
கையைக் கனக்கும் வேண்டாம்'டா
மத்தியானம் வருவேன்'மா
வெயிலில் வெந்து சாகாதே
மத்தியானம் வருவேன் நான்
பத்துப்பானை தேய்ப்பதற்கா?



1

ஒருவனைக் கனவில் கண்டேன்
உதடுகள் பற்கள் கண்கள்
தலை மயிர் நகங்கள் கை கால்
அனைத்துமே மனிதன் போல
இருந்திடும் அவனைக் கண்டேன்
கனவிலும் மனிதன் போலத்
தோன்றினால் மனிதன் தானா?

2

சூத்திரர் தெருக்களென்று
சொல்லுவார்
ஏற்றாற் போல
மாட்டுத் தோல் உலரும்
ஆடு
கோழிகள் நாய்கள் வாழும்

முருங்கைகள்
பிள்ளை வாதக்
கிளைகளைத் தாழ்த்திக் கொண்டு
தெரிந்திடும் விட்டு விட்டுக்
குடிசையின் வாசற்பக்கம்

'பசுபதி
ஆறாம் பாரம்'
என்கிற சாக்குக் கட்டி
எழுத்துக்கள் தெரியும் குச்சு
இடச்சாரி
பெரிய குச்சு

மல்லிகை, முல்லை
சாணி முட்டைகள்
முருங்கைக் காய்கள்
விற்கிற பழக்கமுள்ள
வீடுகள் ஆங்காங்குண்டு

தனிப்பட வர மாட்டாமல்
கடவுளின் துணையில்
அங்கே
வருகிறான் பார்ப்பான்
சாமி
வலம் வர வேதம் பாடி.

O அக்டோபர் 72

## நேற்று யாரும் வரவில்லை.

இரண்டொரு நாட்கள் குளிப்பதற்கில்லை
வைத்தியர் சொற்படி ஒருநாள்
கவனம் கருதி மற்றும் ஒரு நாள்

உடல் நலம் கேட்டு யாரும் வருவார்
திரும்பும் போது
தயவு செய்தெனக்காகச்
சந்து விடாமல் கதவை மூடெனக்
கேட்கணும்

பொருந்தி மூடாக் கதவின் சந்தில்
குத்திட்டு நிற்கும் குழல் விளக்காகத்
தெரிந்திடும் நீல வானை
எத்தனை நேரம் பார்த்துக் கிடப்பது

O ஏப்ரல் 70

காடெ கோழி வெச்சுக்
கணக்காக் கள்ளும் வெச்சு
கூடம் கொளுத்தி வெச்சு

சூரன் சாமி கிட்ட
வரங்கேட்டு வாரீங்களா

ஆரோ வடம் புடிச்சி
அய்யன் தேரு நின்னுடுச்சி

கற்கண்டு வாழெ வெச்சு
விருட்சிப் பூவ வெச்சுப்
பொங்கல் மணக்க வெச்சு

வடக்கன் சாமி கிட்ட
வரங்கேட்டு வாரீங்களா

ஆரோ வடம் புடிச்சி
அய்யன் தேரு நின்னுடுச்சி

இளந் சீவி வெச்சு
இரும்பாக் கரும்ப வெச்சுக்
குளிராப் பால வெச்சுக்

குமரன் சாமி கிட்ட
வரங்கேட்டு வாரீங்களா

தெரு ஓடும் தூரமின்னும்
வடமோடிப் போகலியே
வடம்போன தூரமின்னும்
தேரோடிப் போகலியே

காலோயும் அந்தியிலே
கண் தோற்றம் மாறையிலே
ஆரோ வடம் புடிச்சி
அய்யன் தேரு நின்னுடுச்சி

## பட்டிப் பூ

தையற்காரன் புறக்கணித்த—புது
வெள்ளைத் துணியின் குப்பைகள்போல்
பட்டிப் பூவின் வெண்சாதி—அதைப்
பார்த்தால் மனசு நெக்குவிடும்

காய்ச்சல் நீங்கிக் கண்விழிக்கும்—ஒரு
கன்னிப் பெண்ணின் முதல் சிரிப்பாய்
பட்டிப் பூவின் கருநீலம்—அந்தப்
படுகை எங்கும் மிகவாகும்

எங்கும் வளரும் பட்டிப்பூ—தன்
குடும்பத் தோடும் சூழ்ந்திருக்கும்
செவியின் மீதில் ரோமம்போல்—அது
தனித்தும் வளரும் இப்போது

முலைகள் அசையத் தான் அசையும்--ஒரு
புடவைத் தலைப்பை நினைவூட்டிப்
பட்டிப் பூக்கள் குலை அசையும்—அதன்
பக்கம் எங்கும் புல்பூமி

நாளை மறுநாள் ரயிலேறி—-என்
வீட்டை அடைந்து பைவீசி
படுகைப் பக்கம் நான்போவேன்—என்
பட்டிப் பூவைப் பார்த்துவர

72



''தலைவரார்களேங்....
தமிழ்ப்பெருமக்களேங்...வணக்கொம்

தொண்ணூறாம் வாட்டத்தில் பாசும் வாய்ப்பய்த்
தாந்தமைக்கு மகிழ்கின்றேன். இன்றய்த் தீனம்
கண்ணீரில் பசித்தொய்ரில் மாக்களெல்லாம்
காலங்கும் காட்சியினெய்க் காண்கின்றோங் நாம்''

'வண்ணாரப் பேட்டகிள சார்பில் மாலெ'

''வளமான தாமிழர்கள் வாட லாமா?
கண்ணாளா போருக்குப் போய்வா யேன்ற
பொற நான்ற்றுத் தாயெய் நாம் மறந்திட்டோமா?
தாமிழர்கள் சொகவாழ்வாய்த் திட்டாமிட்டுக்
கெடுப்பவர்கள் பொணக்குவ்யல் காண்போ மின்றே
நாமெல்லாம் வரிப்பொலிகள் பகைவர் பூனெய்
நாரிமதி படைத்தோரை ஒழிப்போம் வாரீர்
தலைவரார்களேங்
பொதுமாக்களேங் நானின்னும்
யிருகூட்டம் பேசயிருப்பதால்
வொடய் பெறுகறேன் வணக்கொம்''

'இன்னுமிரு வர்பேச இருக்கிறார்கள்
அமைதி...அமைதி...

O ஜுலை 69

# உள்ளோட்டம்

பூமியின் பிச்சைக்கார
முகத்திலே ஒரு வெள்ளோட்டம்
வயல்களில் தண்ணீரோட்டம்
விளையாட்டுப் பிள்ளை ஓட்டம்

புளியன் பூ வைத்தாயிற்று
காவிப்பல் தெரிந்தாற் போல
கிளைகளில் அக்கா பட்சி
கூவின வெட்கத்தோடு

தானொரு முதலை போலப்
புதுப்புனல் ஆற்றில் ஓடும்
ஊர்க்கூட்டம் கரையில் ஓட

போகிறார் தலைக்குடத்தில்
ஆற்று நீர் துள்ளத் துள்ள
நீர்மொண்ட குருக்கள் வர்ணக்
குடையின்கீழ் ஈரத்தோடு

கச்சேரி ஆசை உள்ள
கோயிலின் மேளக்காரன்
உற்சாகம் ஒன்றில்லாமல்
தொடர்கிறான் ஊதிக்கொண்டு

## உதைவாங்கி
## அழும் குழந்தைக்கு

என்ன கேட்டாய்?
உன்வீட்டில்
என்ன செய்தாய்?
ஏதெடுத்து
என்ன பார்த்தாய்?
எதைக் கிழித்து
வாங்கிக் கொண்டாய்
அடி உதைகள்?

கெட்டுப்போன
பிள்ளைக்கு
வெளியில் கிடைக்கும்
அடிஉதைகள்
கெட்டுப் போகாப்
பிள்ளைக்கு
வீட்டில் கிடைக்கும்
முன்கூட்டி


அவர்கள் அவர்கள்
பங்குக்கு
உதைகள் வாங்கும்
காலத்தில்
உனக்கு மட்டும்
கிடைத்தாற் போல்
சின்னக் கண்ணா
அலட்டாதே

72

## யோஜனை

அம்மிக்கல் குழவிக்கல்
செதுக்கித் தள்ளும்
ஒரு சிற்பக் கூடத்தில்
மைல்கல் ஒன்று
வான் பார்த்துக் காட்டிற்று
நாற்ப தென்று

O அக்டோபர் 69



ஊருக்கெல்லாம் கோடியிலே
முந்திரிக்கொல்லே

உக்காந்தால் ஆள்மறையும்
முந்திரிக் கொல்லே

செங்கமலம் குளிச்சுப்புட்டு
அங்கிருந்தாளாம்

ஈரச்சேலை கொம்பில் கட்டி
காத்திருந்தாளாம்

நாட்டாண்மைக்காரன் மகன்
அங்கே போனானாம்

வெக்கப்பட்டு செங்கமலம்
எந்திரிச்சாளாம்

நாட்டாண்மைக்காரன் மகன்
கிட்டே போனானாம்

வெக்கப்பட்டுச் செங்கமலம்
சிரிச்சிக்கிட்டாளாம்

உக்காந்தால் ஆள்மறையும்
முந்திரிக் கொல்லே

ஊருக்கெல்லாம் கோடியிலே
முந்திரிக் கொல்லே

## போராட்டம்

கைவசமிருந்த காதற்
கடிதங்கள் எரித்தேன் வாசல்க்
கதவுமுன் குவித்துப் போட்டு

காகிதம் எரிந்து கூந்தல்
சுருளெனக் காற்றில் ஏறி
அறைக்குள்ளே மீளப் பார்க்கக்
கதவினைத் தாழ்ப்பாளிட்டேன்

வெளிப்புறத் தாழ்ப்பாள் முன்னே
கரிச்சுருள் கூட்டம் போட்டுக்
குதித்தது அறைக்குள் போக

காகிதம் கரியானாலும்
வெறுமனே விடுமா காதல்

O அக்டோபர் 69

வயல்களைக் குளங்களென்று
நினைத்திடும் மீனும் நண்டும்
குசலங்கள் கேட்டுக் கொள்ளும்

கொய்கிற அரிவாளுக்குக்
களைவேறு கதிர்வேறில்லை
என்கிற அறிவை இன்னும்
வயல்களோ அடையவில்லை

மீனுடன் நண்டும் சேறும்
நாற்றிசைக் கரையும் பார்த்துக்
குளத்திலே இருப்பதாகத்
தண்ணீரும் சலனம் கொள்ளும்

பறைக்குடிப் பெண்கள் போல
வயல்களில்களைத்துத்தோன்றும்
பெருவிரல் அனைய பூக்கள்
மலர்த்து சஸ்பேனியாக்கள்

படுத்தவை கனவில் மூழ்கி
நிற்பவையாகி எங்கும்
எருமைகள். அவற்றின் மீது
பறவைகள் சவாரி செய்யும்
சரி
மனை திரும்பும் எருமைமேலே
எவ்விடம் திரும்பும் காக்கை?

O 72

## வகுப்புக்கு வரும் எலும்புக் கூடு

'மாணவர்காள் மனிதர்களின் எலும்புக் கூட்டைப்
பார்த்திருக்க மாட்டீர்கள்

மன்னார்சாமி
ஆணியிலே அதைப்பொருத்து. பயப்படாமல்
ஒருவர்பின் னொருவராகப் பார்க்க வேண்டும்

ஏணியைப்போல் இருந்திருப்பான். ஆறடிக்குக்
குறைவில்லை

இது கபாலம்
மார்புக்கூடு . . .
போணிசெய்த பெருங்கைகள் . . .
கைகால் மூட்டு
பூரான்போல் முதுகெலும்பு . . .சிரிக்கும் பற்கள் . . .

கழித்துவிடும் கோபாலன் ஆண்டு தோறும்
புதுசு புதுசாய்ப் பார்ப்பான், இல்லையாடா?''

மாணவர்கள் சிரித்தார்கள் விலாவெடிக்க

ஒட்டிவைத்தாற் போலிருக்கும் சிரிப்பைக் காட்டி
அறைநடுவில் நின்றதந்த எலும்புக்கூடு

O ஏப்ரல் 70

## 1

சாத்துயர் கேட்டுப் போகும்
சுற்றத்தார் சாயல் காட்டிக்
கழன்றது ரத்த வெள்ளம்
குத்துண்ட விலாப்புறத்தில்

அவர் பெயர் ஒன்றினோடு
என்பெயர் ஒன்றிப் போச்சாம்
படுக்கையில் தூங்கும் என்னைக்
காந்தர்வர் கொன்று போனார்

பெயரையே சொல்லிப் பார்த்து
திகைக்கிறேன் எனக்கென் பேரே
எப்படித் துரோக மாச்சு

2

வெளியில் வந்தான் நடுநிசியில்
ஒன்றுக் கிருந்தான்
மரத்தடியில்
நெற்றுத் தேங்காய்
அவன் தலையில்
வீழ்ச்சியுற்று
உயிர் துறந்தான்

ரத்தக் களங்கம்
இல்லாமல்
விழுந்த நோவும்
தெரியாமல்
தேங்காய் கிட்டக்கு
போய்ப்பாரும்

**3**

மூட்டைகள்
அனுப்பக் காத்த
மூட்டைகள்
அவற்றைப் போலப்
பயணிகள்
தூங்கினார்கள்
ஆடைக்குள்
சுருட்டிக் கொண்டு

காரணம்
இல்லாமல் நெஞ்சம்
உணர்த்திய பயத்தைப் போலத்
தொலைவிலே
இரவினூடே
ரயில் முகம்
வைர ஊசி

கிணறுகள்
கால்முளைத்த
கிணறுகள்
இங்குமங்கும்
மூத்திரம்
நின்று பெய்யும்
வியாபாரிப்
பெண்ணைப் போல

ஏணியை
நிமிர்த்துப் போட்டு
ஏறுவார்
அன்றைக் குண்டு
ஏணியைப்
படுக்கப் போட்டு
ஏறுவார்
இன்றைக் குண்டு

**4**

விழிக்கிறான்
முழங்காலொன்று
காணலை

பொசுக்கப்பட்டு
சதைகளும் எலும்புமாகக்
கிடப்பதைத்
தெரிந்து கொண்டான்

வைக்கிறான்
கூறுகட்டி

அறுவையில்
எடுத்த ஈரல்ப்
பகலவன்
சாய்வதற்குள்
பண்டமும்
விற்றுப் போச்சு

வயிற்றடி
ரோமக் காட்டில்
வருவாயைப்
பொத்தி வைத்துப்
படுக்கிறான்
கனவில் யாரோ
பாக்கியும்
எரிக்கிறார்கள்

5

பெயர் சொல்லிக் கூப்பிட்டாள்
புரண்டு கூடப்
படுக்கவில்லை அஃதொன்றும்
கொள்ளிக் கட்டை
கொண்டு வந்து ஒவ்வொன்றின்
காலைச் சுட்டாள்

ஒவ்வொன்றாய் எழுந்திருந்து
என்ன என்ன
அப்பாவை எழுப்பென்றாள்
பந்தம் தந்தாள்

பந்தத்தால் அப்பாவின்
தாடி மீசை
எல்லாமும் கொளுத்திவிடப்
புரண்டெழுந்தான்
ஆயிற்றா உட்கார
லாமா என்றான்

அப்பாவும் பிள்ளைகளும்
உட்கார்ந்தார்கள்
உடுப்புகளைப் புறம்போக்கிப்
படுத்துக் கொண்டாள்

வள்ளிக் கிழங்கின்
பதமாக
வெந்து போன
அவள் உடம்பைப்
பிட்டுத் தின்னத்
தொடங்கிற்று
ஒவ்வொன்றாக
அவையெல்லாம்

எல்லாக் கையும்
முலைகளுக்குப்
போட்டி போட்டுச்
சண்டையிட
அப்பன் கொஞ்சம்
கீழ்ப்புறத்தில்
கிள்ளித் தின்றான்
அவ்வப்போ

## 6

முகக்கண்கள் அழுதால் கண்ணீர்
விடுகிறான் என்னும் நீங்கள்
மயிர்க்கண்கள் அழுதால் மட்டும்
வியர்க்கிறான் என்று சொல்வீர்

வேலைசெய் என்னும் உங்கள்
வார்த்தைகள் குசுப்போல் நாறக்
கழிவறை உலகம் செய்தீர்

குருடுகள் காலூனங்கள்
பித்துக்கள் பிறக்கும் போதே
வேலையைத் தவிர்க்கும் மார்க்கம்
தெரிந்ததால் பிழைத்துக் கொண்டார்

நானொரு குருடனாக
நானொரு முடவனாக
நானொரு பித்தனாகப்
பிறக்காமல் போய்விட்டேனே

**7**

உங்கள் எதிரே நான்வரும் பொழுது
என்னைப் பிடித்துக் கொல்லப் பார்க்கிறீர்
'எப்படி உயிர்க்கலாம் எங்கள் காற்றை நீ?'

காற்றை உண்டு வாழ்கிற வழக்கம்
உள்ளவன் இல்லை நான் எனக்கூறி
மூக்கில்லாத முகத்துக்குங்கள்
பார்வையைக்கொணரப் பியாய்உணர்கிறீர்

நீங்கள் என்னை விட்டுப் போனதும்
ஒளித்து வைத்த மூக்கை எடுத்துப்
பொருத்திக்கொண்டு
உயிர்க்கத் தொடங்கினேன்
தொலைவில் நீங்கள் குலைகிறீர்
காற்றில்லாத பலூனைப் போல

**8**

தூக்கம் வரைக்கும் யாவரும் சித்தர்
தூக்கத்துக்கப்புறம் யாருடா சித்தர்?
தூக்கத்துக்கப்புறம் என்னான்னு கேளு
தூக்கிக் காட்றேன் தெரியுதா பாரு

மே 72

எனக்கும் தமிழ்தான் மூச்சு
ஆனால்
பிறர்மேல் அதைவிட மாட்டேன்

பூ உதிர்ந்த முல்லைக் காம்பாய்
மரம் பட்ட
சாலைக் கென்னை
அனுப்பு முன்
பேரைக் கொஞ்சம்
சோதித்துப் பாருங்கள் ஸார்

சூளைச் செங்கல் குவியலிலே
தனிக்கல் ஒன்று சரிகிறது

சமூகம் கெட்டுப் போய்விட்டதாடா
சரி
சோடாப் புட்டிகள் உடைக்கலாம் வாடா

## நாயகம்

மனிதர் போற்றும் சாமிகளில்
ஒற்றைக் கொம்புக் கணபதியை
எனக்குப் பிடிக்கும். ஏனெனில் வே
றெந்த தெய்வம் வணங்கியபின்
ஒப்புக் கொள்ளும் நாம் உடைக்க?

## பிரச்னை

திண்ணை இருட்டில் எவரோ கேட்டார்
தலையை எங்கே வைப்பதாம் என்று
எவனோ ஒருவன் சொன்னான்
களவு போகாமல் கையருகே வை

அக்டோபர் 68

வில்லைத்தகர எழுத்துகளால்
வெட்டுப்பட்ட விளம்பரம் போல்
நிலத்தின் மீது வயல்வரப்பு

விடிந்த நாளின் முதல் சிகரெட
நெருப்பைத் தவிர மற்றெல்லாம்
பச்சை பொலியும் செழும்பூமி

தோப்புப் பனைகள் தொலைவாக
தாழைப் புதர்கள் உரசாமல்
நடக்கும் அவரைத் தெரிகிறதா?

கையில் கொ[illegible]
ஸ்டேஷன் மாஸ்டர் கொடிபோல்
உமக்கும் இருந்தால் தஞ்சையிலே
நீரும் நடப்பீர் அதுபோல்

எழுந்ததும் கனைத்தார்; மெல்ல
சொற்பொழிவாற்றலானார்:

வழுக்கையைச் சொறிந்தவாறு
'வாழ்க நீ எம்மான்' என்றார்;

மேசையின் விரிப்பைச் சுண்டி
'வையத்து நாட்டில்' என்றார்;

வேட்டியை இறுக்கிக் கொண்டு
'விடுதலை தவறி' என்றார்;

பெண்களை நோட்டம் விட்டு
'பாழ்பட்டு நின்ற' என்றார்:

புறப்பட்டு நான் போகச்சே
'பாரத தேசம்'' என்றார்;

'வாழ்விக்க வந்த' என்னும்
எஞ்சிய பாட்டைத் தூக்கி
ஜன்னலின் வழியாய்ப் போட்டார்
தெருவிலே பொறுக்கிக் கொள்ள

டிசம்பர் 70

# கணையாழியின் கடைசிப் பக்கத்தில்...

**சுஜாதா**

அழகாகப் பதிப்பிக்கப்பட்ட 'அன்று வேறு கிழமை'யில் ஞானக்கூத்தனின் திறமையை முழுமையாகப் பார்க்க வாய்ப்புக் கிடைக்கிறது.

ஞானக்கூத்தனின் கவிதைகள் யாப்புடன் அமைந்தவை. (மேலாகப் பார்த்தால் இது தெரியாது.) எண்சீர், அறுசீர் கலிவிருத்தங்களில் அமைந்தவை. இஷ்டத்திற்குச் சில வேளைகளில், விஷயம் தெரிந்த ஒருவரின் பெயர் நிலையிலிருந்து, சந்தங்களைக் கலக்கிறார். கிடைப்பது ஞானக் கூத்தனுக்கே உரித்தான ஒரு அமைப்பு. ஆனால் யாப்புடன் இன்றைய தின நவீன விஷயங்களைச் சொல்ல முடியும் என்பதை மறுபடி மறுபடி நிரூபித்திருக்கிறார். இதன்மூலம் யாப்பை மீறிப் புதுக் கவிதை எழுதும் முதல் தகுதியை இவர் சுலபமாகப் பெறுகிறார். இது இவர் துருப்புச்சீட்டு. வைத்திருக்கிறார். இன்னும் உபயோகிக்கவில்லை.

'கால வழு அமைதி' என்கிற கவிதையைத் தொகுப்பில் சிறந்த கவிதையாக நான் சொல்வேன். இந்தக் கவிதையை துல்யமான எண்சீர் விருத்தமாகப் படிக்கலாம். அதைவிட ஒலிபெருக்கி அலறும் பொதுக்கூட்ட இரைச்சலின் பின்னணியில் ஒரு அரசியல் வாதியின் கயமை நிறைந்த கட்டைக் குரலில் படிக்கலாம். படிக்க வேண்டும்.

ஞானக்கூத்தனின் உவமைகளில் ஆச்சரியங்கள் இருக்கின்றன. எது எதற்கு உவமையாகப் போகிறது என்கிற

ஆச்சரியம். உதாரணங்கள்: மணி அறியாப் பள்ளிகளில் மணியாக உதவும் தண்டவாளத்துண்டு—பாரதி இல்லாத நாட்டில் லோகல் கவிஞன். எழுதக் குவிந்த கை—குன்று (மணிக்கட்டுப் பக்கம் சகதி.) தையற்காரன் புறக்கணித்த துணித் துண்டுகள்—பூக்கள், ஸ்டேஷன் மாஸ்டர் கொடி—நிலம்.

இவர் சொல்லும் விஷயங்களிலும் இதே எதிர்பார்க்க முடியாத ஆச்சரியங்கள். தாலாட்டின் முதல் வரிக்கே தூங்கி விடும் குழந்தை; சங்க கால அரசாங்கத்தில் தூங்கிய மோசிகீரனார்; தொடர் சங்கிலியாய்க் குரைக்கும் நாய்கள்; 'இத்துடன் என் திருவிளையாடல் முற்றும்' என்று அப்பீலை அனுமதிக்காத சிவபெருமான்; அம்மா சொல்லும் கவிததும்பும் பொய்கள் (முறத் தவிட்டுக்காக உன்னை வாங்கினேன்); உட்கார்ந்தால் ஆள் மறையும் முந்திரிக் கொல்லை (உட்கார்கிறார்கள் நாட்டாண்மைக்காரனும் செங்கமலமும்); வகுப்புக்கு வரும் எலும்புக் கூடு (மன்னார்சாமி! ஆணியிலே அதைப் பொருத்து).

மெலிதாகப் புன்னகைக்க வைக்கும் கவிதைகளின் நடுவில் திடீரென்று ஒரு காஃப்கா படித்த சித்தர்போல மாறுகிறார் ('தொழு நோயாளிகள்', 'தவளைகள்')

யாப்புடன் எழுதுவதால் சில சமயங்களில்வரிகள் அனாவசியமாக நீண்டு விடுகின்றன. உதாரணமாக, 'யெதிரெதிர் உலகங்க'ளில் (பதினெட்டு வரிகள்) கடைசி மூன்று வரிகளில் தான் விஷயத்திற்கு வருகிறார். ஆனால் பெரும்பாலும் சொற்களும், சொல் அமைப்புகளும் சிக்கனமாகவே இருக்கின்றன.

ஞானக்கூத்தனைப் பாகுபடுத்துவது கஷ்டம். அவர் வரிகளை ரசிப்பதும், அவைகளில் நம்மையே கண்டுபிடிப்பதும் சுலபம்

90235
2-9-98.

—அக்டோபர் 1973

Library IIAS, Shimla
T 891.481 418 G 531 A
00090235